Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 144 · வியாழக்கிழமை Thursday · 26.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# சட்டசபை தேர்தலில் 175 இடங்களில் உதயசூரியன் சின்னத்தில் போட்டி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28, தே.மு.தி.க.வுக்கு 10, விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, ம.தி.மு.க.வுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, மனிதநேய மக்கள் கட்சிக்கு 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு 2 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒருசில சிறிய கட்சிகளுக்கும் தலா 1 தொகுதிகள் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

26 கட்சிகளுடன் மெகா கூட்டணி அமைத்துள்ள தி.மு.க.வில், தொகுதி பங்கீடு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. யார் யாருக்கு எந்தெந்த தொகுதிகள் என்பது தற்போது அடையாளம் காணப்பட்டு வருகின்றன. தி.மு.க. கூட்டணியில் இதுவரை கூட்டணி கட்சிகளுக்கு 66 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறைந்தது 165 தொகுதிகளில் தி.மு.க. நேரடியாக போட்டியிடும் என்றாலும், கூட்டணி கட்சிகள் சிலவும் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியனில் களம் இறங்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் சட்டசபை தேர்தலில் 175 இடங்களில் உதயசூரியன் களம் காண உள்ளதாக முதல்- அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திமுக தொண்டர்களுக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

தோழமை தொடர்வோம்.. களத்தினில் வெல்வோம்

நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.

2026 சட்டமன்றத் தேர்தல் களத்திற்கான தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடும், கழகத்தின் சார்பில் விருப்பமனு அளித்தவர்களுடனான நேர்காணலையும் நிறைவு செய்துவிட்டு, அன்பு உடன்பிறப்புகளாம் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

பத்தாண்டுகால படுமோசமான அ.தி.மு.க ஆட்சியினால் தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட சீரழிவுகளைச் சரிசெய்து, கடந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்திய அளவில் உயர்த்திக் காட்டியிருக்கிறோம். இந்தப் பெரும் முயற்சிக்கும் சாதனைக்கும் துணை நின்ற கொள்கைவழித் தோழமை இயக்கத்தினரின் பங்களிப்பு மிகமிக முக்கியமானது. இந்த முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றன.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களிடமும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் எம்.பி. அவர்களிடமும், ம.தி.மு.க பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ அவர்களிடமும் மற்ற இயக்கத் தலைவர்களிடமும் தொகுதிப் பங்கீட்டு நிலவரங்களை உங்களில் ஒருவனான நான் நேரில் விளக்கினேன். நியாயத்தை மதித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றி பெறுவதற்கேற்ப எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டிய சூழல் இருப்பதையும் அவர்களிடம் விளக்கமாகச் சொன்னேன். எப்போதும் என் மீது அன்பும், திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்ற உறுதியும் கொண்ட நமது தோழமை இயக்கத் தலைவர்களும், தங்கள் இயக்க நிர்வாகிகளுடன் தொடர்ந்து ஆலோசித்து, உரிய அவகாசம் எடுத்துக்கொண்டு, பல சுற்று பேச்சுவார்த்தைகளுக்குப் பின் மனப்பூர்வமாக எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் தொகுதிப் பங்கீட்டு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கூட்டணியின் தலைவர் என்ற முறையில் தோழமைக் கட்சிகளை நம்முடைய அங்கமாகத்தான் பார்க்கிறேன். அவர்களுக்கான தொகுதிகளில் முழுமையான வெற்றியை உறுதி செய்ய அவர்களின் சகோதரனாக என் உத்தரவாதத்தையும் வழங்கியிருக்கிறேன்.

நமது கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ள காரணத்தால், உரிய அளவில் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய இருப்பதை நம்முடன் தொடர்ந்து பயணிக்கும் தோழமைக் கட்சிகளான விடுதலைச்சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களின் தலைவர்களுடனும் ஆலோசித்தே தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, ஒப்பந்தங்கள் நிறைவேறியுள்ளன.

தேர்தல் களத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுக்குத் தேவைப்படும் தொகுதிகளை உரிமையுடன் கேட்பதும், அவற்றைப் பரிசீலித்து எந்தளவுக்கு வழங்க முடியுமோ அவற்றை வழங்குவதும் கூட்டணிக்கான நடைமுறையாகும். அதனை ஜனநாயகத்தன்மையுடன் நிறைவேற்றியிருக்கிறது தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி.

கழகக் கூட்டணியின் வெற்றியே பெரிது என்பதை எடுத்துரைத்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவரான நண்பர் கமல்ஹாசன் எம்.பி., அவர்கள் தனது மனம் திறந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையை மனதார வரவேற்கிறேன். அதுபோலவே விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க. உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்களும் மனப்பூர்வமாகத் தெரிவித்திருக்கும் கருத்துகள், 2019 முதல் தொடர்ந்திடும் நமது கூட்டணியின் வலிமைக்குச் சான்றாகும். தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மதவாத அரசியலைத் துணிவுடன் எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோளோடு தோள் நிற்பவை நம் தோழமை இயக்கங்கள். மதச்சார்பின்மை-மாநில உரிமை - சமூகநீதி - சமத்துவம் இவற்றை அடித்தளமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணிதான் நம்முடையது. அதில் ஏதாவது விரிசல் ஏற்படாதா, பிளவு உருவாகாதா, தி.மு.க. கூட்டணியின் வெற்றியைத் தடுத்திட வழி ஏற்படாதா என நினைத்த சதிகாரர்களின் எண்ணங்கள் தவிடுபொடியானதால், தி.மு.க கூட்டணியின் தொகுதிப் பங்கீடு குறித்து தங்கள் கற்பனைக்கேற்ப விமர்சனங்களைப் பரப்பிட முயற்சி செய்கிறார்கள். திசைதிருப்ப நினைக்கும் வதந்திகளை உடன்பிறப்புகள் கண்டுகொள்ளாமல் புறக்கணித்து, தோழமைக் கட்சியினருடன் இணைந்து களத்தில் பணியாற்றி, வெற்றியை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# அதிமுகவில் முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு:

## 23 தொகுதிகளுக்கு அறிவிப்பு



அ.தி.மு.க. கூட்டணியில் இதுவரை பா.ஜ.க.வுக்கு 27, பா.ம.க.வுக்கு 18, அ.ம.மு.க.வுக்கு 11, த.மா.கா.வுக்கு 5, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு 1 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சிக்கு இன்னும் தொகுதிகள் ஒதுக்கபடவில்லை என்றாலும், இரு கட்சிக்கும் தலா 2 தொகுதிகள் வழங்கப்படும் என தெரிகிறது. அ.தி.மு.க. கூட்டணியில் இதுவரை கூட்டணி கட்சிக்கு 62 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இன்னும் 6 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கினாலும், 163 தொகுதிகளில் அ.தி.மு.க. நேரடியாக களம் இறங்குகிறது. என்றாலும், கூட்டணியில் உள்ள சில கட்சிகளையும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வைத்து, தொகுதிகள் எண்ணிக்கையை மேலும் உயர்த்த அ.தி.மு.க. தலைமை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், அதிமுகவில் முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் இன்று வெளியாகியுள்ளது. 23 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. இதன் விவரம் வருமாறு:

எடப்பாடி தொகுதி: எடப்பாடி பழனிசாமி,

வேப்பனஹல்லி: கேபி முனுசாமி

திண்டுக்கல்; திண்டுக்கல் சீனிவாசன்

நத்தம்- நத்தம் விசுவநாதன்

தொண்டாமுத்தூர்; எஸ்.பி.வேலுமணி

குமாரபாளையம் - பி.தங்கமணி

ராயபுரம் -டி. ஜெயக்குமார்

மைலம்- சி.வி. சண்முகம்

மதுரைமேற்கு - செல்லூர் கே.ராஜு

பாலக்கோடு - கே.பி. அன்பழகன்

நன்னிலம் - ஆர். காமராஜ்

வேதாரண்யம் -ஓ.எஸ். மணியன்

விராலிமலை -டாக்டர் சி. விஜயபாஸ்கர்

கோவில்பட்டி: கடம்பூர் சி.ராஜு

திருமங்கலம்: ஆர்.பி உதயகுமார்

சிவகாசி : கே. டி. ராஜேந்திரபாலாஜி

மதுரவாயல்:பா.பெஞ்சமின்

களசபாக்கம்: தி அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி

திருப்பரங்குன்றம்: . வி. வி. ராஜன் செல்லப்பா

பவானி: கே. சி. கருப்பண்ணன்

ஜோலார்பேட்டை : கே. சி. வீரமணி

கரூர்: எம். ஆர். விஜயபாஸ்கர்

அரியலூர்: தாமரை எஸ். ராஜேந்திரன்

முதற்கட்ட பட்டியலின் படி முன்னாள் அமைச்சர்கள் 20 பேருக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவை எம்.பி.யாக உள்ள சி.வி.சண்முகம் மைலம் சட்டமன்றத் தொகுதியில் களமிறங்குகிறார். சிவி சண்முகத்தின் எம்.பி பதவி 2028 ஆம் ஆண்டு வரை உள்ளது.

கூட்டணிக்குதலைமை தாங்கும் அ.தி.மு.க. எஞ்சிய 169 தொகுதிகளில் போட்டியிட உள்ளது. இந்த நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:-

பாஜக (27 தொகுதிகள்)

* மயிலாப்பூர்
* தளி
* முடக்குறிச்சி
* உதகமண்டலம்
* அவிநாசி
* திருப்பூர் தெற்கு
* கோவை வடக்கு
* கந்தர்வக்கோட்டை
* புதுக்கோட்டை
* திருப்பத்தூர்
* மதுரை தெற்கு
* சாத்தூர்
* திருச்செந்தூர்
* வாசுதேவநல்லூர்
* ராதாபுரம்
* நாகர்கோவில்
* விளவங்கோடு
* ஆவடி
* திருவண்ணாமலை
* தஞ்சாவூர்
* திருவாரூர்
* அறந்தாங்கி
* மானாமதுரை
* ராமநாதபுரம்
* குளச்சல்
* பத்மநாபபுரம்
* ராசிபுரம் (தனி)

பாமக (18 தொகுதிகள்)

* சேலம் மேற்கு
* தர்மபுரி
* பென்னாகரம்
* விக்கிரவாண்டி
* சோளிங்கர்
* மயிலாடுதுறை
* திருப்போரூர்
* உத்திரமேரூர்
* ஜெயங்கொண்டம்
* போளூர்
* செஞ்சி
* விருதாச்சலம்
* ரிஷிவந்தியம்
* காட்டுமன்னார்கோவில்
* கீழ்வேளூர்
* பெரம்பலூர்
* சேலம் வடக்கு
* அம்பத்தூர்

அமமுக (11 தொகுதிகள்)

* பெரியகுளம்
* மன்னார்குடி
* திருவையாறு
* காரைக்குடி
* திருப்பத்தூர்
* நாங்குநேரி
* ஒட்டப்பிடாரம்
* திருச்சி மேற்கு
* சைதாப்பேட்டை
* பூந்தமல்லி
* மடத்துக்குளம்

தமாகா (5 தொகுதிகள்)

* ஒட்டன்சத்திரம்
* ஈரோடு மேற்கு
* ராணிப்பேட்டை
* கிள்ளியூர்
* கும்பகோணம்

இந்திய ஜனநாயக கட்சி (2 தொகுதிகள்)

* பல்லாவரம்
* குன்னம்

தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் (1 தொகுதி)

* ராஜபாளையம்

புரட்சி பாரதம் (1 தொகுதி)

* கேவி குப்பம்

# சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்அப் ஆதாரம் போதும்:

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு



தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23-ந் தேதி சட்டசபைதேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30-ந் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4-ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனை கள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது அரசு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொதுமக்கள் யாரும் தேர்தல் நடவடிக்கைகள் முடியு ம்வரை அதாவது வரும் மே 6-ந் தேதிவரை தனிநபராக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் தொகையை எடுத்துச் செல்ல முடியாது. அப்படி கொண்டு செல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பறக்கும்படையினர் அந்தத் தொகையை பறிமுதல் செய்து வருகின்றனர்.

தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளால் பணம் கொண்டு செல்வதில் மக்கள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில், மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ்-அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கிறித்துவ ஊழியர் ஐக்கிய சபை சார்பாக,
# கோவை மாவட்டம் போத்தனூர் பகுதியில் திருத்துவ போதகர்கள் கூடுகை நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை மாவட்டம் போத்தனூர் பகுதியில், டி.இ.எல்.சி லுத்திரன் திருச்சபை வளாகத்தில் திரித்துவ போதகர்கள் கூடுகை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கிறித்துவ ஊழியர் ஐக்கிய சபையின் போதகர்

பிஷப் ஜஸ்டின் ராஜா தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக காங்கிரஸ் கட்சியின்தெற்குமாவட்ட சிறுபான்மை துறை தலைவர் முகம்மது ஹரூன், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும்,வழக்கறிஞருமான புஸ்பாணந்தம், பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் போதகர் ஜான் பீட்டர், ஆகியோர் கலந்து கொண்டு விழா பேருரை வழங்கினர். இந்த விழாவின் வாயிலாக கோவை மாவட்டத்தில் உள்ள பல்வேறு திருச்சபையை சேர்ந்த பேராயர்கள், போதகர்களுக்கு அவர்களின் ஊழியத்தை பாராட்டி பாராட்டு விழா பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை துறை தெற்கு மாவட்ட தலைவர் முகம்மது ஹரூன் அனைவரது மத்தியிலும் சிறப்புரையாற்றி, கட்சியின் சிறுபான்மைதுறை பிரிவு மாவட்ட துணை தலைவராக கிறித்துவ ஊழியர் ஐக்கிய சபை போதகர்

பிஷப் ஜஸ்டின் ராஜாவை நியமிப்பதாக தெரிவித்தார். இதனை ஏற்று கொண்ட போதகர்

பிஷப் ஜஸ்டின் ராஜா தேவனின் கிருபையால் இந்த பதவி தன்னை தேடி வந்துள்ளது. மக்கள் பணியாற்ற கட்டளையிட்டுள்ளதாக தான் இந்த நாளில் என்னுவதாக கூறி சிறப்பு வழிப்பாடு நடத்தினார். தொடர்ந்து தேவ வசனங்கள், தேவ பாடங்களை பாடி சிறப்பு ஜெப நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சியில், காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை துறை குறிச்சி சர்க்கிள் தலைவர் முகம்மது இஸ்மாயில், மாநில துணை தலைவர் பஷீர், மாநில ஒருங்கிணைப்பாளர் ஹரிஸ், மற்றும் ரியாஸ், ராஜ், முகமது ஈசா, ஜெபராஜ், கேத்ரின், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 76 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது



காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் 76 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா இன்று கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் ப.வசந்தி வரவேற்புரையாற்றி கல்லூரியின் ஆண்டு அறிக்கை வாசித்தார். திருவாரூர், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் இரா. திருமுருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரையாற்றி மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். அவர் தனது பட்டமளிப்பு விழாப் பேருரையில் இன்று பட்டம் பெறும் மாணவர்களுக்கென நிறைய கடமைகள் இருப்பதாகவும், அதை உணர்ந்து அவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறி அவர்கள் வாழ்வில் இன்றியமையாத ஏழு கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் என்றும் பழகும் தன்மை, மனப்பான்மை, பேச்சுக்கலை, நேர பங்கீடு, உற்சாகம், தன்னம்பிக்கை திறன்களை வளர்த்துக் கொண்டு தங்கள் வாழ்வில் ஒவ்வொரு படியையும் கவனமாக முன்னெடுத்து வைக்க வேண்டும் என்றும் கூறி நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டு உற்சாகத்துடன் வாழ வேண்டும் என்றும்கூறினார்.மாணவர்கள் கூறும் தளர்ச்சியுறும் வார்த்தைகளுக்கு செவிமடுக்காமல் தன்னம்பிக்கையுடன் இருந்தால் வெற்றியை அடைய முடியும் என்றும் அவர் தன் உரையில் குறிப்பிட்டார். விழாவில் 895 இளநிலை மாணவர்களும் 177 முதுநிலை மாணவர்களும் என மொத்தம் 1072 மாணவர்கள் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டம் பெற்றனர். இவர்களுள் 48 மாணவர்கள் பல்கலைக்கழகத் தரம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பட்டம் பெற்ற மாணவர்கள் அனைவரும் உறுதிமொழிஎடுத்துக்கொண்டனர். பட்டமளிப்பு விழா ஏற்பாடுகளை தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி மற்றும் தாவரவியல் துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். விழாவில் ஏராளமான பேராசிரியர்களும்,மாணவ மாணவியரும் ஆசிரியரல்லாப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

## பத்திரம் காணவில்லை

D.கீதாலட்சுமி, க/பெ.துரைராஜ், நெ.9, பாரதி தெரு, கிழக்கு கந்தசாமிபுரம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்-606107 என்ற முகவரியில் வசிக்கும் நான் என்னுடைய பத்திரத்தை (ஆவண எண்: 740/1998) 2.3.2026 அன்று ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகே பத்திரம் தொலைந்துவிட்டது. எங்கு தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் மேற்படி முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.

D.கீதாலட்சுமி, செல்: 9442585737

## அச்சிறுப்பாக்கம் அருகே
# வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கீர்த்தி முருகன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கீழ் அத்திவாக்கம் ஊராட்சியில்

38 ஆண்டுகளாக வேண்டுபவர்களுக்கு வேண்டும் வரம் தரும் கீர்த்தி முருகன் ஆலயத்தில் கருவறைமகாமண்டபம் விமான கோபுரம் சுதை பிரம்பங்கள் அமைக்கப்பட்டது.

பின்பு கணபதி பூஜை, நவகிரக பூஜை, வாஸ்து சாந்தி பூஜை, உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்று விமான கோபுரத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

தொடர்ந்து மூலவர் கீர்த்தி முருகனுக்குதீபாராதனை காண்பிக்கப்பட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கிராம பொதுமக்கள் விழா குழுவினர் இளைஞர்கள் செய்திருந்தனர்.

## செட்டிநாடு பகுதியான காரைக்குடியில் அமைந்துள்ள பிரபல செல்லப்பன் வித்யா மந்திர் சர்வதேசப்பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா கொண்டாட்டம்




சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு பகுதியான காரைக்குடி அமைந்துள்ள பிரபல செல்லப்பன் வித்யா மந்திர் சர்வதேசப்பள்ளியில் UKG மாணவர்களுக்கான பட்டமளிப்புவிழாமிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. விழா துதிப்பாடலுடன் தொடங்கியது. தொடர்ந்து முதல் வகுப்பு மாணவர்கள் நிகழ்ச்சியை அழகாக தொகுத்து வழங்கினர். பட்டமளிப்பு உடை அணிந்திருந்த சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் மேடையில் நடைபோட்டு, தலைமை விருந்தினர்களிடமிருந்து சான்றிதழ்களையும், நினைவுப்பரிசுகளையும் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வின் தலைமை விருந்தினராக கலந்துகொண்ட அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தின் பேராசிரியரும் துறைத் தலைவருமான டாக்டர் ஜே.சுஜாதா மாலினி அவர்கள், "ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானவர்கள்; அவர்களுக்கு தனித்திறன்கள் உள்ளன" என்று கூறி மாணவர்களை ஊக்குவித்தார். மேலும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளின் தனித்திறன்களுக்கேற்ப பயிற்சி அளித்தால், அவர்களை சமுதாயத்தில் சாதனையாளர்களாக உருவாக்கலாம் என்றார்.

முதன் முறையாகதமிழில் பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற பெண் எழுத்தாளர் டாக்டர் தேவி நாச்சியப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி சிறுகதைகளை பகிர்ந்து மகிழ்வித்தார். மழலையர் மற்றும் முன்தொடக்கப் பள்ளி மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் விழாவிற்கு மேலும் வண்ணம் சேர்த்தன.

பள்ளியின் தாளாளர் திரு. சத்தியன், கல்வி இயக்குநர் டாக்டர் ராஜேஸ்வரி மற்றும் முதல்வர் திரு. சங்கர சுப்பிரமணியன் ஆகியோர் மாணவர்களை பாராட்டி, அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தினர்.

மாணவர்களின் தன்னம்பிக்கையையும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் பெற்றோர்கள் பாராட்டினர். புகைப்பட நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## மதுராந்தகம் அருகே வேடந்தாங்கல் ஊராட்சியில்
# சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு இருக்கைகள் வழங்கும் விழா



செங்கல்பட்டு மாவட்டம்: அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட வேடந்தாங்கல் ஊராட்சி சித்திரைக்கூடம் கிராமத்தில் தமிழ்நாடு கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 'கற்றல் வசதியில் கல்வி' (Educate@Comforts) என்னும் திட்டத்தை 2025 ஜூலை மாதம் சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை அறிமுகப்படுத்தி இதன் பணியாக கிராமங்களில் செயல்படும் அரசுத் தொடக்கப்பள்ளி மற்றும் அரசு நடுநிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு வகுப்பறையில் உட்காருவதற்கு பெஞ்சுகளும் எழுதுவதற்கு மேசைகளும் வழங்கிவருகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமப்புற அரசுப் பள்ளிகளில், போதுமான ருக்கைகள் / மேசைகள் இல்லாததால், மாணவர்கள் வகுப்பறைகளில்தரையில் அமர்ந்து படிக்கவேண்டியுள்ளது. நீண்ட நேரம் தரையில் அமர்ந்திருப்பது, முதுகெலும்பு வட்டுகளின்மீது அழுத்தத்தை அதிகரிக்கிறது. காலப்போக்கில்,இது வட்டு நழுவுதல் (slippeddiscs), நாள்பட்ட முதுகுவலி மற்றும் முதுகெலும்பு

குறைபாடுகள் போன்ற கடுமையான நிலைகளுக்கு வழிவகுக்கும். இவ்வாறு குறுகி அமர்ந்து செயல்படுவது நுரையீரல் கொள்ளளவைக் குறைக்கவும் செய்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்த மிகச்சரியான இருக்கை வசதிகளை (Ergonomic seating) வழங்குவதன் மூலம் மாணவர்களின் உடல்நலனுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவும் இயலும் என்பதனால் 'கற்றல் வசதியுடன் கல்வி' (Educate@Comforts)

திட்டத்தை சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் கவிஞர் விஜயகிருஷ்ணன் தொடங்கி செயல்படுத்தி வருகிறார்.

கற்றல் வசதியுடன் கல்வி' (Educate@Comforts) திட்டத்தின் கீழ் சென்ற மாதம்வரை செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் கல்வி வட்டாரத்தில் உள்ள செனையனேரி, சிறுதாமூர், அனந்தமங்கலம், வடமணிபக்கம் எட்டிப்பட்டு ஆகிய கிராமங்களில் இயங்கும் அரசு பள்ளி வகுப்பறைகளுக்குத் தேவையான இருக்கைகள் மற்றும் எழுது மேசைகள் வழங்கப்பட்டன. உரியகாலத்தில் செய்யப்பட்ட இந்த வசதியினால் மாணவர்கள்,

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து இவ்வாறே அவ்வட்டாரத்தில்

உள்ள அரசுத் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கும் 'கற்றல் வசதியுடன் கல்வி' திட்டத்தை செயல்படுத்தி உதவ வேண்டுகோள் விடுத்தனர்.

கற்றல் வசதியுடன் கல்வி'திட்டத்தின்தொடர்பணியாக சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை பெருநகரங்களில் செயல்படும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைத் தொடர்புகொண்டு அந்நிறுவனங்களில் பயன்படுத்தப்படாமல் உள்ள அதேநேரம் பயன்படுத்தக்கூடிய இருக்கைகள் மற்றும் மேசைகளை நன்கொடையாகப்பெற்றுஅவற்றை சீர்செய்து,வண்ணம்தீட்டி தேவைப்படும் கிராமப்புற அரசுப் பள்ளிகளின் வகுப்பறைகளுக்கு வழங்குகின்றது. தளவாடப் போக்குவரத்து மற்றும் புதுப்பித்தல் செலவுகளை

பின்னர் இத்திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் மேலும் அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களைத்தொடர்புக்கொண்டு வகுப்பறைகளுக்குத் தேவையான இருக்கை மற்றும் எழுது மேசைகளின் எண்ணிக்கையை அறிந்து 'கற்றல் வசதியுடன் கல்வி' திட்டதின்மூலம் வழங்கும் நடவடிக்கையில் இந்த அறக்கட்டளை தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

இத்தகவல்களை கற்றல் வசதியுடன் கல்வி' (Educate@Comforts) திட்டத்தின் நிறுவுநரும், செயலாக்குநர் மற்றும் சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநருமான கவிஞர் விஜயகிருஷ்ணன் தெரிவித்தார். மேலும் இவர் இந்த திட்டத்தின் பணிகளை மாநிலம் முழுவதும் கொண்டு சேர்ப்பதற்கான தன்னார்வலர் குழுக்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இருக்கை மற்றும் எழுது மேசைகளை அச்சிறுபாக்கம் வட்டம் மதுராந்தகம் வட்டம் வேடந்தாங்கல்

அருகிலுள்ள சித்திரகூடம் அரசு நடுநிலைப் பள்ளிக்கு வழங்கும் விழா அப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அலுவலர் திரு. ஜி. மணிவண்ணன் முதன்மை விருந்தினராக இவ்விழாவில் கலந்துகொண்டு மாணவர்களுக்கான இருக்கைகளை 'கற்றல் வசதியுடன் கல்வி' திட்டத்தின் நிறுவுநரும், செயலாக்குநருமான கவிஞர் விஜயகிருஷ்ணனிடமிருந்து பெற்றுக்கொண்டு பள்ளிக்கு வழங்கினார். சித்திரகூடம் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.தி.இராசேந்திரன, சமூக ஆர்வலர் திரு. சுகுமார், திரு ரங்கப்பன், திருமதி திவ்யா, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# காங்கிரஸ் கட்சி உத்தேச பட்டியல்: நெல்லை, தென்காசி மாவட்டத்தில் தலா 2 தொகுதிகளை கேட்கும் காங்கிரஸ்



நெல்லை, தென்காசி மாவட்டத்தில் தலா 2 தொகுதிகளை கேட்கும் காங்கிரஸ் இம்முறை நெல்லை மாவட்டத்தில் இரு தொகுதிகள் இடம் பெற்றுள்ளன.நாங்குநேரி மட்டுமின்றி நெல்லை தொகுதியையும் காங்கிரஸ் கேட்டு வருகிறது. மதசார்பற்ற ஜனநாயக கூட்டணியில் இம்முறை காங்கிரஸ் கட்சியானது, தங்களுக்கு கடந்த முறை ஒதுக்கப்பட்ட சீட்டுகளை விட கூடுதல் சீட் வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

அதன்பேரில்கடந்த தேர்தலில் 25 சீட்டுகள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது காங்கிரசிற்கு 28 இடங்கள் அளிக்கப்பட்டுள்ளன. காங்கிரஸ் ஏற்கனவே போட்டியிட்ட 25 இடங்கள் தவிர்த்து, இம்முறை கூடுதலாக 3 இடங்களையும் கேட்டு பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது

காங்கிரஸ் தற்போது கேட்டுள்ள உத்தேச பட்டியலில், கிள்ளியூர், விளவங்கோடு, குளச்சல், பத்மநாபபுரம், ஸ்ரீவைகுண்டம், ஆலங்குளம், விருதுநகர், ராமநாதபுரம், காரைக்குடி, தென்காசி, திருவாடானை, முதுகுளத்தூர், நாங்குநேரி, ஊத்தங்கரை, முசிறி, நெல்லை, மணப்பாறை, சோளிங்கர், சிதம்பரம், மொடக்குறிச்சி, திருப்பூர் தெற்கு, வேடசந்தூர், மதுரை மத்தி, கோவை தெற்கு, மதுராந்தகம் (தனி), கலசப்பாக்கம், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, வேளச்சேரி, எழும்பூர்(தனி), பொன்னேரி(தனி), மயிலாடுதுறை, கூடலூர் (தனி), கும்பகோணம், உதகை, சிவகாசி, விருதாச்சலம் ஆகிய தொகுதிகள் இடம் பெற்றுள்ளன.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை நாங்குநேரி, நெல்லை ஆகிய இரு தொகுதிகள் இடம் பெற்றுள்ளன. இதுபோல் தென்காசி மாவட்டத்தில் ஆலங்குளம், தென்காசி ஆகிய இரு தொகுதிகள் இடம் பெற்றுள்ளன. கடந்த தேர்தலை விட இம்முறை 3 தொகுதிகளில் காங்கிரஸ் கூடுதலாக போட்டியிடும் நிலையில், அந்த 3 இடங்களும் தென் மாவட்டங்களில் இருக்க வேண்டும் என அக்கட்சி விரும்புகிறது. எனவே கூடுதலாக பெறப்பட்டுள்ள 3 தொகுதிகளும் நெல்லை, தென்காசி, குமரி மாவட்டங்களில் இருக்க வேண்டும் என விரும்புவ தாக கூறப்படுகிறது



சேலம் அம்மாப்பேட்டை குமரகிரி தண்டாயுதபாணி கோயிலில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு விழா விமர்சையாக நடைபெற்றது. 9 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட திருப்பணிகள், பணிகளில் ஏற்பட்ட தொய்வு காரணமாக தாமதமாகி, தற்போது ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறைவடைந்து விழா நடத்தப்பட்டது. யாகசாலை பூஜைகளுக்குப் பிறகு, மூலவர் விமானம் மற்றும் அனைத்து கோபுரங்களுக்கும் புனிதநீர் ஊற்றி சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகம் நடத்தினர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முப்பெரும் விழா




சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்லூரி ஆண்டு விழா , கல்லூரி விளையாட்டு நாள் விழா மற்றும் கல்லூரி பேரவை நிறைவு விழா ஆகியவை இணைத்து முப்பெரும் விழாவாக நடைபெற்றது.

இவ்விழாவில் முனைவர் ஆ.ரெணிபிரபா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. திருக்குமரன் அவர்கள் தலைமை தாங்கி கல்லூரியின் பல்வேறு அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற செயல்பாடுகளை பற்றிய கல்லூரியின் ஆண்டு அறிக்கையையும் வாசித்தார்.

கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர் ந. சவீதா அவர்கள் 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகள் பற்றிய ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

இவ்விழாவில் திட்டமலை , அரசு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ் . சூரியகாந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, கல்லூரி பேரவையின் சார்பாக ஒவ்வொரு துறையிலும் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழும், கேடயமும் வழங்கினார்கள்.

மேலும் இக்கல்லூரியில் கடந்த மூன்று மாதங்களாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, அப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு துறையின் சார்பாக பாராட்டு சான்றிதழும், பதக்கமும், கேடயமும் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வரலாற்று துறை வேதியல் துறை மற்றும் இயற்பியல் துறையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் ஒட்டுமொத்த சாம்பியன் அணியாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான சுழற் கோப்பையும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் இக்கல்லூரியைச் சேர்ந்த அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும்,அலுவலகப்பணியாளர்களும் மற்றும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியாக கல்லூரி பேரவையின் சார்பாக முதலாம் ஆண்டு முது அறிவியல் மாணவன் பா.கார்த்தி நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

# கோடை காலத்தில் கால்நடைகளுக்கான பராமரிப்பு முறைகள்

## சிகிக்கைள் மற்றும் ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள கால்நடை நிலையங்களை அணுகிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வலியுறுத்தல்



ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கோடை காலத்தில் கால்நடைகளுக்கான பராமரிப்பு முறைகள்

கால்நடைகளுக்கு மிக சவாலாக திகழுவது கால நிலையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் உற்பத்திக்கு அதிக வெப்பம் பெரும் சவாலாக உள்ளது. கால்நடைகளில் ஏற்படும் பல்வேறு அயற்ச்சிகளில் உயர் வெப்பத்தால் ஏற்படும் அயற்ச்சியே பெரும் பாதிப்பு மற்றும் உடலியல்மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

வெப்ப அயற்சியின் (Heat Stroke) அறிகுறிகள்

அதிகாக உமிழ்நீர் வடிதல், அதிகமாக தண்ணீர் பருகுதல், பகலில் குறைவாக தீவனம் உட்கொள்ளுதல், நிழலில் தஞ்சம்புகுதல், வாயை திறந்த நிலையில் வேகமாக சுவாசித்தல் போன்றவை வெப்ப அயற்சியின் அறிகுறிகளாகும்.

கீழ்க்கண்ட பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி வெப்ப அயற்சியிலிருந்து கால்நடைகளை பாதுகாப்பதுடன் பொருளாதார இழப்புகளையும் குறைக்கலாம்.

கால்நடைகளை பாதுகாத்திட பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

கால்நடைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் வெயிலுக்கு முன்பு மேய்ச்சலுக்கு விட வேண்டும். காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேய்ச்சலுக்கு விடுவதை தவிர்க்க வேண்டும்.

கறவைமாடுகளுக்கு ஒருநாளைக்கு 4 முதல் 5 முறையாவது தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீரின் மீது கலப்புதீவனத்தை சிறிதளவு தூவும் போது கால்நடைகள் அதிக தண்ணீர் குடிக்கும். தாது உப்புக்கலவை, வைட்டமின்கள் கொடுப்பதன் மூலம் வெப்ப அயற்சி அறிகுறிகள் குறைவதுடன் உற்பத்தி குறையாமல் இருக்கும். நீர்தெளிப்பான்கள், மின்விசிறிகளைகொட்டகைகளில் பயன்படுத்துவதன் மூலம் உடல்வெப்பத்தைக் குறைக்கலாம், அதிகமாக பசுந்தீவனம் அளிக்கலாம்.உலர்தீவனத்தை பகலில் குறைவாக கொடுத்து இரவில் அதிகமாக கொடுக்கலாம்.

எருமை மாடுகளை குளியல் தொட்டி அமைத்து வெயில் நேரங்களில் தொட்டிகளில் விடுவதன் மூலம் வெப்ப அயற்சியில் இருந்து பாதுகாக்கலாம்.வெப்ப அயற்சியின்காரணமாககோழிகளில் முட்டை உற்பத்தி குறைந்து விவசாயிகளுக்கு மிகுந்த பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றது.

கோடைகாலத்தில் கோழிகளுக்கு விடியற்காலை பொழுதிலும், இரவிலும் தீவனம் அளிக்க வேண்டும். எல்லா நேரங்களிலும் சுத்தமான குளிர்ந்த குடிநீர்இருப்பதைஉறுதி செய்ய வேண்டும். குடிநீரில் வைட்டமின்கள் பி – காம்ப்ளக்ஸ், குளுக்கோஸ் கலந்து கொடுக்கலாம். அதிக இடவசதி உள்ள இடத்தில் உயரமான கூரை அமைத்து குறைவான எண்ணிக்கையில் கோழிகளை பராமரிக்க வேண்டும். மேலும் பண்ணைகளில் உயிரி பாதுகாப்பு முறைகளை பின்பற்றி நோய் தாக்காமல் தடுக்கலாம்.

ஆடுகளுக்கு ஒருநாளைக்கு குறைந்தபட்சம் 8 முதல் 12 லிட்டர் சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும். ஆடுகளுக்கு அம்மை, ஆட்டுக்கொல்லி நோய் போன்றவற்றிற்கான தடுப்பூசிகளை உரிய காலத்தில் போட்டு நன்கு பராமாரித்திட வேண்டும்.ஆடுகளுக்கு பட்டிகளில் உப்பு கட்டிகளை கட்டுவதன் மூலம் சோடியம், பொட்டாசியம் முதலிய சத்துக்கள் எளிதாக கிடைக்கும். கோடையில் கிடைக்கும் புரதச்சத்து மிக்க வெல்வேல் மற்றும் கருவேல் உலர் காய்களை ஆடுகளுக்கு உணவாக கொடுக்கலாம்.

மேற்கண்ட பராமரிப்பு முறைகளை பின்பற்றி கால்நடைகளை வெப்ப அயற்சியிலிருந்து பாதுகாத்து, விவசாயிகள் பொருளாதார இழப்புகளை தவிர்க்கலாம்.

மேலும் ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் 106 கால்நடை மருந்தகங்கள், 6 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 2 கால்நடை பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள், தாது உப்புக்கலவைகள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது.

எனவே ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளை வெப்ப அயற்சியிலிருந்து பாதுகாத்திட தேவையானசிகிக்கைள் மற்றும் ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள கால்நடை நிலையங்களை அணுகிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் நிலத்தை மீட்கக்கோரி ஏப்ரல் 2ல் பிரம்மாண்ட ஊர்வலம்

## இந்து முன்னணி மாநில பொதுச்செயலாளர் ஜே.எஸ்.கிஷோர் குமார் அறிவிப்பு



ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் திருவிழா தொடங்கியுள்ள நிலையில், கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை மீட்பதில் தமிழக அரசு மெத்தனப் போக்குடன் செயல்படுவதாகக் கூறி இந்து முன்னணி சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர் ஜே.எஸ்.கிஷோர் குமார், ஈரோடு பெரிய மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான 12.66 ஏக்கர் நிலத்தை சி.எஸ்.ஐ (CSI) நிர்வாகம் ஆக்கிரமித்துள்ள நிலையில், அதனை மீட்க நீதிமன்றம் உத்தரவிட்டும் கடந்த ஐந்து ஆண்டுகால திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார். கோவில் நிலத்தை மீட்டு 80 அடி சாலை விரிவாக்கம் மற்றும் கோவில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை அரசு தொடர்ந்து புறக்கணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.மேலும்,திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற அனுமதி மறுப்பு, சென்னிமலையில் கந்த சஷ்டி கவசம் பாடிய பக்தர்கள் மீது பொய் வழக்குகள் மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நள்ளிரவில் ஜாமர் கருவிகளைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான கோவில்களை இடித்தது போன்ற செயல்கள் மூலம் திமுக அரசு தனது இந்துவிரோதப்போக்கை வெளிப்படுத்தி வருவதாக சாடினார். மற்ற மதத்தினருக்கு சலுகைகளை வாரி வழங்கும் அரசு, இந்துக்களின் உணர்வு களைத் திட்டமிட்டுப் புண்படுத்து வதாகவும், இதனை கண்டித்து வரும் ஏப்ரல் 2-ம் தேதி 10,008 பெண்கள் பங்கேற்கும் பிரம்மாண்ட தீர்த்த அபிஷேக ஊர்வலம் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார். தொடர்ந்து ஏப்ரல் 5-ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் வீடு வீடாகச் சென்று 'இந்து விரோத திமுகவை தோற்கடிப்போம்' என்ற துண்டுப் பிரசுரங்கள் மூலம் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்றும் ஜே.எஸ். கிஷோர் குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த நிகழ்வின் போது உடன் மாவட்ட தலைவர் ஜெகதீசன், மாவட்ட பொதுச் செயலாளர் கார்த்தி மற்றும் நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (24.03.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டுவரும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு மேற்கொண்டார்.

### அதிமுக ஆட்சிக்காலத்தில் சாத்தான்குளத்தில்

# ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் காவல்நிலையத்தில் அடித்துத்தான் கொல்லப்பட்டார்கள் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது

## தெருமுனைப் பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாநகா் பகுதியில் நடைபெற்ற மதச்சாா்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு மாநகர் திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பொியசாமி, காங்கிரஸ் ஏ.பி.சி.வி. சண்முகம், கம்யூனிஸ்ட் தனலட்சுமி, வி.சி.க விமல்வங்காளியாா், மதிமுக முருகபூபதி, ச.ம.க அற்புதராஜ், தே.மு.தி.க தயாலிங்கம், ம.ம.க யூசப், எஸ்.டி.பி.ஐ மைதீன்கனி, ம.ஜ.க முகமதுஹசன், வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, செந்தில்குமார், கவுன்சிலர்கள் கனகராஜ், கந்தசாமி, ஆகியோா் முன்னிலை வகித்தனா். பகுதி செயலாளர் ரவீந்திரன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிா் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டு திமுக அரசின் சாதனைகள் குறித்து எடுத்துரைத்தார். அப்போது அவர் பேசுகையில்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் திட்டங்களால் தமிழகம் கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் 2021க்கு முன்பு அதிமுக ஆட்சியில் வியாபாரிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. இரவு 9.30 மணிக்கே கடைகளை மூடச்சொல்லி போலீசார் வியாபாரிகளை மிரட்டியதும், கடைகளில் உள்ள பொருட்களை தூக்கி எறிந்ததும் அனைவரும் அறிந்ததே. ஆனால், இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் வியாபாரிகள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி விடிய விடிய சுதந்திரமாக வியாபாரம் செய்து வருகின்றனர் என்றார். மேலும் அவர் பேசும்போது சாத்தான்குளத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் (தந்தை – மகன்) ஆகிய இருவரையும் காவல்நிலையத்தில் அடித்துக் கொன்ற கொடூரம் அதிமுக ஆட்சியில் தான் நடந்தது. ஆனால், அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அவர்கள் 'உடல்நலக் குறைவால் இறந்தார்கள்' என அப்பட்டமாகப் பொய் சொன்னார். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தையே டிவியில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்று பொறுப்பற்ற முறையில் பதிலளித்தார். இன்று சாத்தான்குளம் வழக்கில் அவர்கள் அடித்துத் தான் கொல்லப்பட்டார்கள் என்பது அறிவியல் பூர்வமாகநிரூபிக்கப்பட்டுள்ளது. தன்னுடைய முதல மைச்சர் நாற்காலியை மட்டும் காப்பாற்றிக் கொள்வதற்காக, பாஜகவிடம் கைக்கட்டி, வாய் பொத்தி அடிமையாக இருந்தவர் தான் எடப்பாடி பழனிசாமி என அமைச்சர் கீதா ஜீவன் கடுமையாக குற்றம் சாட்டினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாநகர துணைச்செயலாளா்கள் கீதாமுருகேசன்,பிரமிளா, பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டுராஜா, இசக்கிராஜா, மாநில பேச்சாளா் சரத்பாலா, இருதயராஜ், மாவட்ட அணி நிா்வாகிகள் அபிராமிநாதன், அருண்குமாா், கவிதாதேவி, பிரபு நாகராஜன், ராமர்,பகுதிசெயலாளர்கள் ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மேகநாதன், மாநகர அணி நிா்வாகிகள் ரூபஸ் அமிர் தராஜ், கிறிஸ்டோபர் விஜயராஜ், ஜீவன்ஜேக்கப், பரமசிவம், முருகஇசக்கி, பால்ராஜ், செல்வின், ரவி, அறங்காவலா் குழு தலைவர்கள் செந்தில்குமார், கந்தசாமி, வட்டச்செயலாளர்கள், ரவீந்திரன், கருப்பசாமி, கதிரேசன், முனியசாமி சிங்கராஜ், சுரேஷ், பத்மாவதி, பொன்பெருமாள், மந்திரகுமாா், கவுன்சிலா்கள் பொன்னப்பன்,ஜான்,சரவணக்குமாா், ராமா், மற்றும் பாஸ்கா் மணி, பிரபாகா், சுந்தா்ராஜன், சந்திரசேகா், ரேவதி, மகேஸ்வாி, முன்னாள் கவுன்சிலா்கள் அந்தோணிராஜ், இசக்கிமுத்து, கூட்டணி கட்சியை சேர்ந்த மகாராஜன், நக்கீரன், மாடசாமி, முரளிதரன், வில்சன், ஆறுமுக நயினார், வல்லரசு துரை, உள்பட பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டுவரும் தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் தூத்துக்குடி காங்கிரஸ் ஒருங்கிணைந்த மாவட்டம் நடத்தும் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு மற்றும் கருத்து கேட்பு கூட்டம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தூத்துக்குடி காங்கிரஸ் மாநகர் மாவட்ட செயலாளர் செ.மைக்கேல் பிரபாகர் பேசுகையில்: தூத்துக்குடியில் பல்வேறு பகுதியில் உங்கள் அமைந்துள்ளது அதில் காமராஜர் பெயரை வைக்க வேண்டும் அதுபோல பல்வேறுபகுதியில்சாலைகள்உள்ளனஅதிலும்காமராஜர்சாலைஎன்றுபெயரைவைக்கவேண்டும்என்றுவலியுறுத்தினார். மேலும் இப்படி செய்தால் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் இன்னும் வலுவாக செயல்படுவார்கள் என்று தெரிவித்தார். தொடர்ந்து கூட்டத்தில் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். நிகழ்ச்சியில் ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உட்பட கலந்து கொண்டனர்.

# மக்கள் நீதி மய்யம் தேர்தலில் போட்டியிட வேண்டும் திருமாவளவன் வேண்டுகோள்



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் நேரடியாகப் போட்டியிடவில்லை என்றும், திமுக கூட்டணியின் வேட்பாளர்களை நிபந்தனையின்றி ஆதரிக்கிறது என்றும் அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று அறிவித்தார். இந்த நிலையில் மக்கள் நீதி மய்யம் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாகஅவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நிறைவுபெறும் தறுவாயில் உள்ளது. அடுத்து எந்த எந்த தொகுதிகள் என்பது குறித்த பேச்சுவார்த்தை தொடங்கவுள்ளது. இதுவும் மிக இலகுவாக விரைவாக நடந்தேறும். இந்நிலையில்,திமுககூட்டணியில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடாமல் கூட்டணியை ஆதரிக்கும் நிலை எடுத்திருப்பது ஏற்புடையதாக இல்லை. அக்கட்சியின் தலைவர் அண்ணன் கமல்ஹாசன் தமிழ்ச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு மகத்தான திரைக் கலைஞர். நான்கு சதவீத அளவலான வாக்கு வங்கியைக் கொண்ட ஒரு அரசியல்தலைவர்.அவர் நம்மோடு மனமுவந்து களத்தில் நிற்பது தான் நமது கூட்டணிக்கு நலம் பயக்கும்.

மக்கள் நீதி மய்யம் மேற்கொண்டுள்ள இத்த நிலைப்பாடு குறித்தும் கூட்டணியில் நடந்தேறிய பேச்சுவார்த்தைகள் குறித்தும் விடுதலைச் சிறுத்தைகளின் கருத்துகளைக் கூட்டணியின் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களது மேலான பார்வைக்கு வெளிப்படையாக முன்வைப்பது எமது ஜனநாயகப் பொறுப்பு எனக் கருதுகிறோம்.

கருத்தியல் அடிப்படையிலும், கொள்கை பகைவர்களை வீழ்த்தி வெல்வதற்கான உத்திகளின் அடிப்படையிலும், தொலைநோக்குப் பார்வையோடு ஓரணியில் திரண்டு 'மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி'யாக நாம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறோம். 2017-ம் ஆண்டிலிருந்து நாம் ஒருமித்த கருத்தோடு இதுநாள் வரையில் ஒற்றுமையாக கைகோர்த்துக் களமாடி வருகிறோம். தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளுக்காக மட்டுமே கூடிக் கலையாமல், மக்கள் நலன்களை முன்னிறுத்தி மாநில அளவிலும்இந்திய அளவிலும் வாதாடுகிற போராடுகிற ஒரு கூட்டியக்கமாகவே தொடர்ந்து தொய்வின்றி இயங்கிவருகிறோம்.

# குன்னூர் வெலிங்டனில் குடியிருப்பு பகுதிக்குள் 3 வது முறை புகுந்த சிறுத்தை



குன்னூர் : குன்னூர் அருகே வெலிங்டன் பகுதியில் 3வது முறையாக குடியிருப்புக்குள் புகுந்த சிறுத்தையின் சிசிடிவி காட்சியால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சமீபகாலமாகவனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் அண்ணாநகர் கிராமத்தில் வன விலங்குகள் அடிக்கடி உலா வருகின்றன. இந்த பகுதியிலசுமார்200க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இந்த கிராமம் அடர்ந்த வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. இதன் காரணமாக கரடி, காட்டுமாடு,சிறுத்தை போன்ற வனவிலங்குகள் அவ்வப்போது குடியிருப்பு பகுதிக்குள் நுழைவது வழக்கமாக உள்ளது. அதிகாலை 4.40 மணியளவில் கிராமத்திற்குள் புகுந்த சிறுத்தை ஒன்று, ஆள் நடமாட்டமற்றவீதிகளில் சாதாரணமாக நடந்து சென்றுள்ளது.பின்னர் அருகில்இருந்ததேயிலை செடிகளுக்குள் புகுந்து மறைந்தது. இந்த காட்சிகள் அங்குள்ள ஒரு வீட்டின் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. இந்தகாட்சிவெளியானதால் மக்கள் பீதியடைந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில்

# ஷிங் எனும் பிரீமியம் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் விற்பனை செய்யும் அங்காடி திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## இந்திய வருமான வரித்துறை அதிகாரியும், ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு துணை இயக்குநருமான பிரபாகரன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில்,கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் வீரர்களுக்காக உருவாக்கப்பட்ட பிரீமியம் கிரிக்கெட் கடையான ஷிங் எனும் அங்காடியின் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. உயர்தர கிரிக்கெட் உபகரணங்கள் மற்றும் கிரிக்கெட் விளையாட்டிற்க்கு தேவையான அனைத்து விளையாட்டு உபகரணங்களும் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்ற, நோக்குடன் இந்த கடை தொடங்கப்பட்டுள்ளது. இந்த திறப்பு விழா நிகழ்ச்சியில், இந்திய வருமானவரித்துறை அதிகாரியும், ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு துணை இயக்குநருமான பிரபாகரன், கோவை மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் சந்திரமௌலி ஆகியோர்சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கேற்றிவைத்தும் திறந்து வைத்தனர்.

கூடுதலாக "கன்னகி" திரைப்பட இயக்குநர் யஷ்வந்த் கிஷோர் மற்றும்பவிழம்ஜுவல்லர்ஸ் இயக்குநர் லிஜோ எஸ். சுங்கத் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்

மேலும் இந்நிகழ்ச்சியில் பாண்டியன் ஸ்டோர்ஸ்" தொடரில் நடித்த நடிகை ஷாலினி பங்கேற்று வாழ்த்திக்கள் தெரிவித்தார்.

மேலுல் இந்த கடை குறித்து, கடையின் உரிமையாளர் கூறியதாவது..

அனைத்துதரப்புகிரிக்கெட் வீரர்களுக்கும் தேவையான அனைத்து, உயர்தர கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை வழங்கும் ஒரு மையமாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இக்கடையானதுஆர்.எஸ்.புரத்தில் அமைந்துள்ளதால், அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் வீரர்களை ஈர்க்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது என கூறினார்.

கோவை மாநகர விளையாட்டுவீரர்களின் திறன்களை வெளிபடுத்தவும், கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கு மேலும் ஒரு முக்கிய கட்டமாக ஷிங் விளங்கும் என தெரிவித்தார்.

# விஜய் நடித்த படங்களை தியேட்டர்கள், தொலைக்காட்சிகளில் போடக்கூடாது: தேர்தல் ஆணையத்திற்கு கடிதம்



தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறுகிறது. தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லாதநிலையில்,அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. தமிழக வெற்றிக்கழகம் கட்சி இந்த தேர்தலில் முதல் முறையாக களம் காண்கிறது. அக்கட்சியின் தலைவர் விஜய் நடிகருமானவர் என்பதால், அவரது ஜனநாயகன் படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சென்சார் பிரச்சினையில் சிக்கிய ஜனநாயகன் படம் தற்போது தேர்தல் ஆணையத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தமிழ்நாட்டில்தேர்தல்நடத்தை விதிமுறை அமலில் உள்ளதால், இந்த நடைமுறை பின்பற்றப்ப டுவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில்,விஜய்யின் படங்களை தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சிகளில் திரையிடுவதற்கு தடை விதிக்கவேண்டும்என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தமிழக தேர்தல்ஆணையருக்குகாங்கிரஸ் கட்சியை சேர்ந்த மதுரை தெற்கு தொகுதி பொறுப்பாளர் செய்யது பாபு, இந்த கோரிக்கையை கடிதம் மூலம் முன்வைத்துள்ளார். இந்த விவகாரத்தில் தேர்தல்ஆணையம்எவ்வாறுநடவடிக்கைஎடுக்கும் என்பது குறித்து தமிழகஅரசியல்வட்டாரத்தில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரிய ராமதாஸ் வழக்கு: சென்னை உரிமையியல் நீதிமன்றம் முக்கிய உத்தரவு



சென்னை: பாமகவின் மாம்பழம் சின்னத்தை முடக்கக்கோரி கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தொடர்ந்த வழக்கில் நாளைக்குள் பதில் அளிக்க அன்புமணிக்கு சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாமக தலைவராக அன்புமணியை அங்கீகரித்து தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, நிறுவனர் ராமதாஸை தலைவராகவும், அவர் நியமித்த நிர்வாகிகளையும் அங்கீகரிக்கதேர்தல்ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் எனவும், உள்கட்சி பிரச்சினை தொடர்பான உரிமையியல் வழக்கில் தீர்வு எட்டப்படும் வரை, பாமகவின் சின்னமான மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்கும்படி, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரி ராமதாஸ்சென்னை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், உள் கட்சி விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்பதால்,உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் தேடிக் கொள்ளலாம் எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்கைவிசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் பிரெண்ட்லி மேட்ச் ஆடுகிறது எனத் தெரிவித்ததுடன்,மாம்பழம் சின்னத்தை கேட்டு சிவில் நீதிமன்றத்தை உடனடியாகநாடவேண்டும் என ராமதாஸ் தரப்புக்கு உத்தரவிட்டது. அவ்வாறு தாக்கல் செய்யப்படும் மனுவை மூன்றே நாட்களில் விசாரித்து முடிவை எடுக்க வேண்டும் எனவும் சென்னை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், மாம்பழம் சின்னம் விவகாரம் தொடர்பாக, உச்ச நீதிமன்ற உத்தரவை சுட்டிக்காட்டி, ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல்நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உரிமையியல் நீதிமன்ற நீதிபதி தர்மபிரபு முன் இன்று விசாரணைக்கு வந்தது, அப்போது அன்புமணி தரப்பில் பதிலளிக்க கால அவகாசம் கேட்கப்பட்டது. இதையடுத்து நாளைக்குள் அன்புமணி தரப்பு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை நாளைக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

# பாமக முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு..!



சென்னை: அதிமுக - பாஜக கூட்டணியில் பாமகவுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 3 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அக்கட்சியின்தலைவர்அன்புமணி வெளியிட்டார். மீதமுள்ள 15 தொகுதிகளின் வேட்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்படும் என அன்புமணி கூறியுள்ளார். நாகை மாவட்டம் கீழ்வேளூர் தொகுதியில் பாமக பொதுச்செயலாளர் வடிவேல் ராவணன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாமக முன்னாள் இளைஞரணி தலைவர் கணேஷ்குமார் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தொகுதியில் போட்டியிடுகிறார்.

சென்னை அம்பத்தூரில் பாமக வேட்பாளராக கே.என்.சேகர் என்பவர் போட்டியிடுவார் என அன்புமணி அறிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.